www.Padasalai.Net www.Trb Tnpsc.com

12 R

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

Reg. No.

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக **14 x 1 = 14**

1. உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) சுரதா
2. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
3. தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம்.............
அ) எழும்பூர் ஆ) இராயபுரம் இ) சென்னை
4. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்
அ) முத்துவீரியம் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம்
5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
6. வேடுவர் தலைவன்............. அ) சுக்ரீவன் ஆ) குகன் இ)இராமன் ஈ) வீடணன்
7. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி.............
அ) படிமம் ஆ) தொன்மம் இ) அங்கதம் ஈ) குறியீடு
8. தமிழுக்குத் தலைகொடுத்த வள்ளல் அ) பாரி ஆ) பேகன் இ) குமணன் ஈ) அதியமான்
9. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்.
10. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" யார் யார்?
அ) இராமன், சவரி ஆ) சடாயு, இராமன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், குகன்
11. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்
அ) பத்து நாடுகள் ஆ) எட்டுநாடுகள் இ) ஏழு நாடுகள் ஈ) ஆறு நாடுகள்
12. 'ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது' என்று குறிப்பிட்டவர்
அ) ஹிராக்ளிடஸ் ஆ)இறையன்பு இ) ஐராவதம் மகாதேவன் ஈ) மயிலை சீனி வேங்கடசாமி
13. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் காரணம்
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்
14. "தலையசைத்து உதறுகிறது
மீதமான சொட்டுக்களை ஈரமான மரங்கள்", இவ்வரிகள் இடம்பெற்ற நூல் .........
அ) மழைக்குப் பிறகும் மழை ஆ) நீர்வெளி இ) அய்யப்ப மாதவன் கவிதைகள் ஈ) நெடுநல்வாடை.

### பகுதி - II

#### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3 x 2 = 6**

15. ஞாலத்தின் பெரியது எது?
16. சூரியஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்பமாதவன் குறிப்பிடுகிறார்?
17. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

#### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடைதருக. **2 x 2 = 4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. "மையாடல் விழா" என்றால் என்ன?
21. "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.

#### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. **7 x 2 = 14**

22. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன - விடைக்கேற்ற வினா அமைக்க.
23. அ) தலைமை ஆ) கோவில் - சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
24. தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
ஆ) இன்னைக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்
25. உவமைத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

அ) அச்சாணி இல்லாத தேர் போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

26. கரை - கறை - பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.
    அ) செல்லிடத்து ஆ) புதுப்பெயல்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) அமர்ந்தனன் ஆ) கலங்கி
29. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமக்க
    மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.
30. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் அறிந்து தொடர் அமைக்கவும்

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 4 = 8**

31. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
32. அதிசயமலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?
33. சிலப்பதிகாரம் கூறும் நாட்டிய அரங்கின் அமைப்பை விளக்குக
34. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 4 = 8**

35. பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணிகள் யாவை?
36. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.
37. தமிழர் பரம்பரை - குடும்ப மரத்தின் பெயர்களை எழுதுக.
38. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3 x 4 = 12**

39. தொழில் உவமை அணி (அல்லது) எடுத்துக்காட்டு உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. செவியறிவுறூஉத் துறை (அல்லது) நெய்தல் திணையைச் சான்றுடன் விளக்குக.
41. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' அல்லது "யானைக்கும் அடி சறுக்கும்" - பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
42. தமிழாக்கம் தருக.
    அ) If you want people to understand you, speak their language.
    ஆ) The limits of my languages are the limits of my world.
    இ) knowledge of languages is the doorway to wisdom.
    ஈ) knowledge is power.
43. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனை எழுதுக.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
  மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
  கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழியொழுகும்
  செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேனியலங் காரர்
  குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- திரிகூட ராசப்பக் கவிராயர்

## பகுதி - IV

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. **3 x 6 = 18**

44. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்காலவருணனையைச் சொல்லில் வடிக்க **(அல்லது)**
    அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று விளக்குக.
45. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக **(அல்லது)**
    நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
46. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**
    கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. **4 + 2 = 6**

47. அ) "விண்வேறு"............ எனத்தொடங்கும் - 'இதில் வெற்றிபெற' என்ற தலைப்பில் இடம்பெற்ற பாடல்
    ஆ) "தலை" என முடியும் குறள்.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com